**செய்தி வெளியீடு எண்: 206** **நாள்: 01.04.2013**

**தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம்**

**இளம் கலைஞர்களுக்கு ஊக்கமளிக்கும் திட்டம் –**

தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம் தகுதிவாய்ந்த இளம் கலைஞர்களுக்குக் கலை நிறுவனங்களின் வாயிலாக கலை நிகழ்ச்சிகள் நடத்திட வாய்ப்புகள் வழங்கும் திட்டத்தின்கீழ், இளம் கலைஞர்களைத் தெரிவு செய்து அவர்களுக்கு தமிழகத்தில் சிறப்புடன் செயல்படும் கலை நிறுவனங்களின் வாயிலாகக் கலை நிகழ்ச்சிகளை நடத்திட வாய்ப்புகள் வழங்கி ஊக்குவித்து வருகின்றது.

இத்திட்டத்தின்கீழ் பரதநாட்டியத் துறையில் 16 வயது முதல் 30 வயதிற்குட்பட்ட இளங்கலைஞர்களுக்கும், இசைத்துறையில் குரலிசை, கதாகாலட்சேபம், நாதசுரம், கிளாரினெட், தனி வயலின், வீணை, கோட்டுவாத்தியம், மாண்டலின், சாக்சபோன், கிதார், புல்லாங்குழல், ஜலதரங்கம் பிரிவுகளைச் சார்ந்த இசைக்கலைஞர்களுக்கும், பக்கவாத்தியங்களான வயலின், மிருதங்கம், கஞ்சிரா, கடம், முகர்சிங், கொன்னக்கோல் ஆகிய பிரிவுகளைச் சேர்ந்த 16 வயது முதல் 30 வயதிற்குட்பட்ட இளங்கலைஞர்களுக்கும் தமிழகத்தில் நன்முறையில் இயங்கும் கலை நிறுவனங்களின் வாயிலாகத் தலா நான்கு கலை நிகழ்ச்சிகள் நடத்திட வாய்ப்புகள் வழங்கப்படுகின்றது. இக்கலைஞர்களின் கலை நிகழ்ச்சிகளை நடத்திட கலை நிறுவனங்களுக்கு நிதியுதவியும், கலைஞர்களுக்கு மதிப்பூதியமும் மன்றத்தால் வழங்கப்பட்டு வருகின்றது.

இத்திட்டத்தின்கீழ் கடந்த பல ஆண்டுகளில் மன்றத்தால் தேர்வு செய்யப்பட்ட கலைஞர்கள் தற்போது முன்னணி கலைஞர்களாக விளங்கி வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கதாகும். நடப்பாண்டில் (2012–2013) மார்ச் திங்கள், 21, 22, 23 ஆகிய தேதிகளில், திருமதி நந்தினி ரமணி, திருமதி கிருஷ்ணகுமாரி நரேந்திரன், திரு.மாதவபெத்தி மூர்த்தி, திருமதி ரேவதி ராமச்சந்திரன் ஆகிய வல்லுநர்கள் கொண்ட குழுவால் நேர்காணல் நடத்தப்பெற்றதில், பரதநாட்டியத் துறையைச் சேர்ந்த பின்வரும் இளங்கலைஞர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

**<u>பரதநாட்டியம்</u>**

1 செல்வி சுதர்மா வைத்தியநாதன், சென்னை
2 செல்வி ரம்யா வெங்கட்ராமன், சென்னை
3 செல்வி கே.ஆர்.மனஸ்வினி, சென்னை
4 செல்வி ஸ்ரீ காயத்ரி, சென்னை
5 செல்வன் கே.எம்.ஜெயகிருஷ்ணன், சென்னை
6 செல்வி சுவாசனி கண்ணன், சென்னை
7 செல்வி ஜெ.வித்யா, சென்னை

2

மார்ச் திங்கள், 25, 26, 27, 28 ஆகிய தேதிகளில், திரு. டி.எச்.விநாயக் ராம், திருமதி சுகந்தா காளமேகம், திரு.சேஷம்பட்டி சிவலிங்கம் ஆகிய வல்லுநர்கள் கொண்ட குழுவால் நேர்காணல் நடத்தப்பெற்றதில், இசைத் துறையைச் சேர்ந்த பின்வரும் இளங்கலைஞர்கள் தெரிவு செய்யப் பட்டுள்ளனர்.

**குரலிசை**

1 செல்வி ஐஸ்வர்யா சங்கர், சென்னை
2 செல்வி கிருத்திகா நடராஜன், சென்னை
3 செல்வன் க. கேதார்நாத், தஞ்சாவூர்
4 செல்வி பா.ஸ்ரீவித்யா, சென்னை
5 செல்வன் ஜி.அபிலாஷ், சென்னை

**வீணை**

1 செல்வன் கு.ரா.ஸ்ரீவத்ஸ், சென்னை

**புல்லாங்குழல்**

1 செல்வன் கு.ஆதித்யராம், சென்னை

**மிருதங்கம்**

1 செல்வன் எஸ்.அரவிந்த், கும்பகோணம்
2 செல்வன் டி.எஸ்.ஹரீஷ்குமார், சென்னை
3 செல்வன் ஆர்.அக்ஷைராம், சென்னை
4 செல்வன் டி.எஸ்.கோகுல்நாத், மதுரை
5 செல்வன் பி.மனோகர், புதுதில்லி
6 செல்வன் மு.மணிகண்டன், சென்னை
7 செல்வன் வாதிராஜ், சென்னை

**கஞ்சிரா**

1 செல்வன் எஸ்.ஸ்ரீநாத், மதுரை

**நாதசுரம்**

1 செல்வன் இ.பெருமாள், விழுப்புரம்
2 செல்வன் மு.உமாசங்கர், நாகப்பட்டினம்
3 செல்வன் இ.பி.வினோத், நாகப்பட்டினம்
4 செல்வன் கொல்லங்கோடு இரா.சுப்பிரமணியன், பொள்ளாச்சி
5 செல்வன் திருவள்ளூர் ஜே.பி.முத்துக்குமார், திருவள்ளூர்
6 செல்வன் ஆர்.ஹேமராஜ், காஞ்சிபுரம்

**தமிழில் புதிய நாட்டிய–நாடகங்கள் தயாரித்து மேடையேற்றம் செய்யும் திட்டம்**

தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம், தமிழக அரசின் சார்பில், தமிழகக் கலைகளின் மேம்பாட்டு வளர்ச்சிக்கும், கலைஞர்களின் நல்வாழ்விற்கும் பல்வேறு அரிய கலைத் திட்டங்களை உருவாக்கிச் சிறப்புடன் செயற்படுத்தி வருகின்றது. அவற்றுள் தமிழில் சிறந்த நாட்டிய நாடகங்களை தயாரித்து மேடையேற்றம் செய்யும் நாட்டிய நிறுவனங்களுக்கு நிதியுதவி வழங்கும் திட்டமும் ஒன்றாகும்.

இத்திட்டத்தின் மன்றத்தால் தமிழில் சிறந்த நாட்டிய நாடகங்களை மேடையேற்றம் செய்வதற்கு விண்ணப்பங்கள் வரவேற்கப்பட்டதில், மொத்தம் வரபெற்ற 10 நாட்டிய நாடகங்களில் பின்வரும் 3 நாட்டிய நாடகங்கள், திருமதி.நந்தினி ரமணி, திருமதி கிருஷ்ணகுமாரி நரேந்திரன், திரு.மாதவ பெத்தி மூர்த்தி, திருமதி ரேவதி இராமச்சந்திரன் ஆகிய வல்லுநர்களால் ஆய்வு செய்யப்பட்டு மேடையேற்றம் செய்ய தெரிவு செய்யப்பட்டது.

| வ.எண் | நாட்டியக் கலைஞரின் / கலை நிறுவனத்தின் பெயர் | நாட்டிய–நாடகத்தின் பெயர் |
|---|---|---|
| 1 | ஸ்ரீ முத்ராலயா, சென்னை | சப்த விடங்கம் |
| 2 | தஞ்சாவூர் ஹெரிடேஜ் ஆர்ட்ஸ் & கல்சுரல் அகாடெமி, தஞ்சாவூர் | சரபேந்திர பூபால குறவஞ்சி |
| 3 | திருமதி சூர்யா சந்தானம் | ஔவையார் |

**வெளியீடு:**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை-9**